# கர்த்தருடைய ஆவி உன்மேல் இறங்குவார். நீ . . . வேறு மனுஷனாவாய். I சாமு 10 : 6

சாமுவேல் சவுலைப் பார்த்து சொன்ன இந்த வசனம் இந்த மாதம் உங்கள் வாழ்விலும் நிறைவேறப் போவதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

**இனிமேல் நீ பழைய மனுஷனல்ல. புதிய மனுஷன் – மனுஷி.**

**பக்தன் பாடுகிறார் . .**

பெரிய மாற்றம் என்னுள்ளத்தில்
பெரிதான மாறுதல் என் வாழ்க்கையில்
நான் மறுபடி பிறந்ததினால்
முன்பு செய்ததை நான் செய்வதில்லை . . . .
நான் மறுபடி பிறந்ததினால்

இந்த மாதத்தில் அடிக்கடி மேற்கண்ட பாடல்களின் வரிகளைச் சொல்லிப் பாடுங்கள். பாடிக்கொண்டே இருங்கள்.

**வேதம் கூறுகிறது,**

“இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்.” – என்பதாக.

**மேலும்,**

“இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்.” அது இப்பொழுதே தோன்றும் – என்பதாக.

**1 சாமுவேல் 10 : 6 கூறுகிறது,**

கர்த்தருடைய ஆவி உன்மேல் இறங்குவார், நீ அவர்களோடே கூட தீர்க்கதரிசனம் சொல்லி, வேறு மனுஷனாவாய். – என்பதாக.

இன்னும் எத்தனை நாட்கள் தீர்க்கதரிசன வார்த்தைகளை எதிர்பார்த்து ஓடப் போகிறாய் ? நீயே தீர்க்கதரிசனம் சொல்லப் போகிறாய். ஏனெனில், இந்த மாதத்தில்,

**“கர்த்தருடைய ஆவி உன்மேல் இறங்குவார்.”**

**அப்போ. 2 : 18 கூறுகிறது,**

என்னுடைய ஊழியக்காரர் மேலும், என்னுடைய ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள் – என்பதாக.

**நீ வேறே மனுஷனாவாய், வேறே மனுஷியாவாய்.**

விசுவாசிப்போம். பெற்றுக்கொள்ளுவோம். ஆமென்.